செ.வெ.எண்:35/2017 நாள்:13.09.2017

**சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டம், கூட்டுறவுப்பட்டி கிராமத்தில் 113 பயனாளிகளுக்கு ரூ.13,10,536/- மதிப்பில் நலத்திட்ட உதவிகளை**

**மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப.,அவர்கள் வழங்கினார்.**



சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டம், கூட்டுறவுப்பட்டி கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் பயனாளிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா.இ.ஆ.ப.,அவர்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.காஞ்சனா, சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் திரு.சுந்தரமூர்த்தி மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் உள்ளனர்.

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை வட்டம், கூட்டுறவுப்பட்டி கிராமத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் 113 பயனாளிகளுக்கு ரூ.13,10,536/- மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

வருவாய்த்துறை மூலம் 8 பயனாளிகளுக்கு வாரிசுச் சான்றிதழ், 10 பயனாளிகளுக்கு சிறு விவசாயச் சான்று, 2 பயனாளிகளுக்கு விதவைச் சான்று, 8 பயனாளிகளுக்கு குடும்ப அட்டை பெயர் நீக்கல் மற்றும் சேர்த்தல், 19 பயனாளிகளுக்கு பட்டா மாறுதல், 18 பயனாளிகளுக்கு முதியோர், மாற்றுத் திறனாளிகள், விதவை மற்றும் இயற்கை மரண உதவித் தொகைக்கான ஆணைகளையும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பில் 11 பயனாளிகளுக்கு தலா ரூ.4,000/- வீதம் ரூ.44,000/- மதிப்பில் விலையில்லா தையல் இயந்திரங்களையும், வேளாண்மைத் துறையின் சார்பில் 2 பயனாளிகளுக்கு தலா ரூ.768/- மானியத்தில் உளுந்து, தோட்டக்கலைத் துறையின் சார்பில் தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் கீழ் 1 பயனாளிக்கு ரூ.87,500/- மானியத்தில் வெங்காய சேமிப்பு கிடங்கு பணி ஆணையும், 1 பயனாளிக்கு ரூ.1,77,500/- மானியத்தில் நிழல் வலைக்கூடம் அமைப்பதற்கான பணி ஆணையும், 1 பயனாளிக்கு ரூ.40,000/- மானியத்தில் வீரிய ஒட்டுரக தக்காளி ரகம்,1 பயனாளிக்கு ரூ.20,000/- மானியத்தில் வீரிய ஒட்டுரக கத்தரி ரகம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பில் பசுமை வீடு 1 பயனாளிக்கும், பாரதப் பிரதம மந்திரி குடியிருப்பின்

திட்டத்தின் கீழ் 2 பயனாளிகளுக்கு பணி ஆணையும், மகளிர் திட்டம் சார்பில் மகளிர் சுயஉதவிக் குழுவிற்கு தலா ரூ.40,000/- வீதம் 11 குழுவிற்கு ரூ.4,40,000/-, நலிவுற்ற மற்றும் மாற்றுத் திறனாளிகள் வாழ்வாரத்தை உயர்த்த சிறப்பு நிதி 15 பயனாளிகளுக்கு ரூ.3,00,000/-மும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் மூலம் 2 சுய உதவிக் குழவிற்கு தலா ரூ.1,00,000/- வீதம் ரூ.2,00,000/-மும் ஆக மொத்தம் 113 பயனாளிகளுக்கு ரூ.13,10,536/- மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கிப் பேசியதாவது,

சிவகங்கை மாவட்டத்தில் 8,000 கண்மாய்கள் உள்ளன. உறுதியளிக்கப்பட்ட நீர்ப்பாசனக் கண்மாய்கள், மழையை நம்பி உள்ள கண்மாய்கள் ஆகிய இரண்டு வகைகளாக உள்ளன. மழை காலத்தில் கிடைக்கும் நீரை வீணாக்காமல் வரத்துக்கால்வாய் மற்றும் கண்மாய்களை தூர்வாரி அந்த நீர் வளத்தை பயன்படுத்துமாறும், கண்மாய்களில் தூர்வாரப்பட்ட சவடு மண்ணை விவசாய நிலங்களுக்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும், இங்கு உள்ள காலக்கட்டத்திற்கேற்ப நீண்டகால பயிர்களுக்கு பதிலாக குறுகிய காலப் பயிர்களை பயன்படுத்தி அதிக மகசூல் பெறலாம். பாரதப் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.176 கோடி பயிர் காப்பீட்டு இழப்பீட்டு தொகை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மண்வளத்தை பெருக்க மகாத்மாகாந்தி வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் நமது மாவட்டத்தில் 1½ லட்சம் மரக்கன்றுகள் நடப்படவுள்ளன. வீடுகள் தோறும் தனிநபர் கழிப்பறை கட்ட வேண்டும். சுத்தம் மற்றும் சுகாதாரம் சேர்ந்தால் நோய்கள் வராமல் இருக்கும். ஆகவே, பொதுமக்கள் இத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். திடக்கழிவு மேலாண்மை மூலம் ஊராட்சி தோறும் தூய்மைக் காவலர் நியமிக்கப்பட்டு, அவர்களின் மூலம் வீடுகள் தோறும் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என்று பிரித்து கொடுத்தால் ஊர் சுத்தமாக இருக்கும் என்றும், அரசு திட்டங்கள் பற்றி ஏதேனும் சந்தேகம் இருந்தால் **“1077”** என்ற இலவச தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ,ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.காஞ்சனா, சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் திரு.சுந்தரமூர்த்தி அனைத்துத்துறை அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், சிவகங்கை.